13th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதில் ஒருவர் கோர்ட்டுக்குப் போயிருந்தார். கோர்ட் தீர்ப்புக்கு பிறகு மற்றதெல்லாம் ஆக வேண்டும்.

Production of tea in the State

* 236 Q.—SRI K. S. ABDUL WAHAB : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total quantity of tea produced in the State during 1964–65 or latest available year;

(b) the target fixed for the Third Five-Year Plan; and

(c) whether the target so fixed has been achieved?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Total quantity of tea produced in the State during 1964 is 41,755 kgs.

(b) Target for Third Five-Year Plan fixed for all India basis is 376.5 m.kg. Separate targets for each State were not fixed.

(c) The trend of production in the last five years indicates no difficulties in achieving the target.

SRI K. S. ABDUL WAHAB : May I know, Sir, the amount of foreign exchange earned by the export of tea from our State?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information. This is only available with the Government of India.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியைப் பொருத்தவரையில் நம்முடைய மாநிலத்திற்கு என்று அதற்கான உச்ச எல்லை தீர்மானிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அகில இந்திய அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், நம்முடைய மாநிலத்தில் எந்த அளவு உற்பத்தியாகிறது, எவ்வளவு ஆகவேண்டுமென்று மாநிலத் திட்டத்தில் வரம்பு கிடையாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்காக திட்டம் போடுவதில்லை. காரணம் என்னவென்றால், ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு போர்டு இருக்கிறது. அந்த போர்டு அவற்றைப் பற்றி தீர்மானிக்கிறது. நமக்கு வந்த கணக்கில் வருஷா வருஷம் அதிகமாக உற்பத்தியாகிறது. அதை வைத்துக்கொண்டுதான் சொல்கிறோம்.

Exemption of tractors

* 237 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of tractors exempted under the Madras Motor Vehicles Taxation Act, 1931, 3-20 p.m.
district-war, in 1964–65?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the Table of the House.

---

[a] Printed as Appendix II on pages 395-396.